Name of Hara encompass; World be free from suffering
Shaivam.org

கணபதி துணை.

# அப்பய தீக்ஷித சுவாமிகள்

அருளிச்செய்த

# சிவதத்துவவிவேகம்.

திருக்கயிலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்துச்

## சிவஞானசுவாமிகள்

மொழிபெயர்த்தருளியது

இது

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதரால்

தமது

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது

சென்னபட்டணம்

இதன்விலை அணா - ௨

கணபதி துணை.

# சிவதத்துவவிவேகம்.

## பாயிரம்.

உலகெ லாந்தன மொருசிறு கூற்றினு ளடைய
வலகி லாற்றலா னிறைந்தவ னெனவரு னூலோர்
குலவி யேத்துவோ னெவனவ னுமையொரு கூற்றி
னலர்க றைக்களச் சிவபிரா னடியிணை போற்றி. (௧)

வேறு

செவியுற வாங்கி மோகத் திண்படை சிலையிற் பூட்டுங்,
கவிகைவேள் படியச் சற்றே கறுத்தியோ குறையும் பெம்மா
ன, குவிதழை நிறையப் பூத்த கோழிணர்ப் பதுமச் செங்கே,
ழவிர்தரு விழிக்திக் கென்றன் வினையிலக் காகு மாலோ. (௨)

வேறு.

திருமாலிந் திரன்பிரம னுபமனியன் றபனனந்தி செவ்வே
ளாதித், தருமமுதா குரவருக்குந் தனதருளா லாசிரியத் தலைமை
நல்கி, வருமெவர்க்கு முதற்குருவாய் மெய்ஞ்ஞான முத்திரை
க்கைம் பலரும் வாய்ந்த, வருவழகுங் குறுநகையுங் காட்டியரு
டருஞ்சிவனை யுளத்தில் வைப்பாம். (௩)

வேறு.

எல்லை யில்கலை யென்னுங் கொடிபடர்
மல்லல் வான்கொழு கொம்பரின் வாய்ந்தருள்
கல்வி ஞானக் கடலமு தாயசீர்
பல்கு தேசிகர் பாத மிறைஞ்சுவாம். (௪)

வேறு

மறைமுடிவிற் பயில்கருத்து மன்னியமெய்ப் பொருள் விருப்பும், கறைமிடற்றோன் றிருவடிக்கீழ் மெய்யன்புங் கடுந் துயர்நோய், பறையவரு மிம்மூன்றும் பரிந்தியல்பாக் கிடைத்த டன, நிறைவுடையோ ரேவரவர் நீடூழி வாழியவே (௫)

வேறு

பரசி வன்றனை துயர்ச்சியே தெரிப்பதிற் பகரொருப பாட் டிற்று, யரிய காலக்கதிர் வியாதனு நியர்மொழி யால்விளங் கிடு நாதநாய்த், திரிவு காட்சிய ருளத்துறு தறிஙிகா செம்பொருட் கோவைத்தாய, விரியு நீருல கினுக்கிதந் தருமுதல் வித்தை யோங்குக மாதோ (௬)

வேறு.

எட்படுநெய யெனவுயிருக் குயிரா யெங்கு மேகமாம் பசு டன்றா மொளத்துஞ் செய்யுள், விட்டாருமுண் ணிறைந்தபொருட் சுவைய வாகி மேலோர்தம் வழிச்செல்லு மறுபானுக்கு, முட்க ருத்து வெளிப்படுப்ப விழிந்த மார்க்கத் தாழ்வோர்தம் பிதற் றுரைகட் கனுகொளாது, நட்புடைய வுரையிண்டுச் செய்ய லுற்றே னல்வழிச்செல் லறிவாளர் நயக்கு மாறே (௭)

நூல்.

நின்பெருந் தன்மை வானவர் தமக்கு நிகழ்த்தரி தாதலின் மனித, னன்பொடும் வழுத்த விழைந்திடி னதையே யடைவ தற் கையமின் றேனு, முன்பெயர் கருதும் பெருந்தவம் வருவா யொருவழி யாற்கிடைத் திடுக, வென்பதோர் மதிவந் தென்னை யீர்த் தெழுமா லெங்கணு நிறைந்தபூ ரணனே. (க)

விச்சுவா திகனும் விசுவசே வியனும் விமலநீ யேயென மறைக, ணிச்சய மாக முழக்கவு மறியா ரீசர்தாம் பிணங்குவ ரந்தோ, மச்சரத் தனக்கே தீங்கிழைத் தவர்தம் வாழ்க்கையும் பயன்படா தாலத், துச்சர்சொற் கேட்டோர்க் கிறுதலே தண்டஞ் சொற்றிடு நூலெலா மன்றே. (உ)

எழைய ரிருகாற் பசுக்கண்மற் றிவரா லியன்றிடத் தக்க தொன் றிலையே, வாழிய நலந்தீங் கறிந்துயி ரியற்ற வல்லதோ யாங்கணும் விரவிச், சூழுநீ யெவ்வா றசைத்தனை யவ்வா றசைதலிற் சுதந்திர மிலதாற், பாழிமால் விடையா யவ்வுயி ரந்தோ பழித்திடுந் தகையதொன் றன்றே. (௩)

கீதநான் மறையு ளோரொரு விதிவாக் கியங்களைப் பற்றி நல் வேள்வி, யாதிகண் முயலத் துணிபவ ரெல்லா வருமறை முடிவினு முழக்கு, பேதகு முனது தலைமையைத் துணியா தொழிவரோ விளங்கிழை யொருபா, ஞுதனே யவர்தாம் பரவசத் தினராய் நணுகில ராயிடின் மன்றே. (௪)

உன்றனை யெதிரே கண்டுமெம் புயந்தோ னுணர்ந்திலன் மால்சொல வுணர்ந்தான், வென்றிவெள் ளானைப் பாகனு முமையாள் விளம்பிடத் தேர்ந்தன னியலா, மன்றலந் துளவோ னயனுட னுன்றன் * மயக்கறத் துணர்ந்தன னென்று, லின்றனை யேழை மானுட ரறியா ரென்பது மாயவேண் டுவதோ. (௫)

* பிரமதேவரும், விஷ்ணுமூர்த்தியும், இந்திரனும் அறிவிக்க அறிந்தார்களென்பதனைச் சூதசங்கிதை சிவமான்மியகாண்டம் இரண்டாம் மூன்றமத்தியாயங்களினும், எக்கிய வைபவகாண்டம் நான்காமத்தியாயத்துங்காண்க.

உன்றிரு வடிக்கீ ழுறுதியா மன்பு முன்றிரு வருளினுற் கிடைப்ப, தன்றிநூல் பலவு மாய்ந்ததா லுரைசெ யளப்பருந் திறமையான் மதியான், மன்றவே கிடைப்ப தன்றுமற் றதனை மாதவஞ் செய்திலாக் கயமை, துன்றிய புலையோர் யாங்ஙனம் பெறுவார் சோதியே கருணைவா ரிதியே. (சு)

உலகர்சே ருறுதிப் பயனெவற் றினுக்கு முறைவிட மாய்த்துயர் முழுதும், விலகுறத் துமிக்குங் கண்ணச்சியா முன்றாள் விரைமலர்க் கியற்றுமெய்ப் பத்தி, யலகிலாப் பிறவி தொறும் புரி தவத்தா லல்லதெவ் வாற்றினு மரிதே, நலமதொன் றடைதற் குறுமிடை யூறு நாதனே பலவுள வன்றே. (எ)

பலவகைப் பவந்தோ றெய்திடுந் தவத்தோர் படர்ந்தெழு மகத்திருள் கடிந்தோர், நலமுறு மியம நியமநற் செய்கை நயந்துளோ ருனைப்பெற முயல்வார், கலியுறு நவைசே ருளத்தவ ரசுரக்கடுமையர் * ததீசியா திகளா, லலமரச் சபிக்கப் பட்டுளோ ரெவ்வா றறிவரோ வையநின் றனையே. (அ)

அளவிலுன் பெருமை யறியவு முன்றாட் கழிவிலா வன்புவைத் திடவுந், தளமல ரெடுத்துன் னருச்சனை யாற்றிச் சால நின் றிருவருள் பெறவும், வளமலி புலியூ ரம்பலத் தமுதே மலர்த்தலை யுலகினுட் சுரும்ப, ருளர்துழாய்ப் படலை மார்புடை யண்ண லொருவனே வல்லனு மன்றே. (கூ)

தணப்பிலா நிரதி சயமதாஞ் சச்சிதானந்த வடிவமாய்த் துவிதப், பிணக்கிலி பரமான் மாவெனுந் தகைத்தாய்ப் பிரத்தியக் காயுப நிடதத், திணக்குறு மகண்டப பொருள்களா லுணருமியல்பதா யனந்தமா யோங்குங், குணிப்பருஞ் சோதி யாகி நிற் கின்றாய் கோதிலாச் சிவபரம் பொருளே. (க0)

குணங்களைக் கடந்தோ யெனினுமா யையினைத் தோய்தலாற் குணமுடை யவன்போ, லணங்கொரு பாலுங் கறைமி

* ததீசியாதிகளாற் சபிக்கப்பட்டமை சூதசங்கிதை எக்கியவைபவகாண்டம் முப்பத்திரண்டாமத்தியாயத்துட் காண்க.

டற் றழகு மம்பக மூன்றுமா முருக்கொண், டிணங்குறு நாமஞ் சிவன்பவன் முதலா வியைந்தய னரியரான் முன்னு, முணங் கிடா வுலகை நடாத்துவோ னாகி யோங்கினை நீங்கரும் பொருளே. (கக)

## அதர்வசிகை.

முளரியோன் முதலாஞ் சுரரெலாம் பூத முதலவற் றோடு தித் துள்ளோ, ரீளவிடுந் தலைமை யாவரென் றவரை யகற்றி மால் விடையுவ நினையே, வளமுறு மெல்லாத் தலைமையு முடையோன் வருமுதற் காரண னல்லோ, ருளமுறு தியானப் பொருளெனச் சிகைதேர்ந் துரைப்பவு மயங்குவர் சிலரே. (கஉ)

மறையகத் தெல்லாத் தலைமையோ ரொருபால் வகுத்திடுங் கேவல மதுதா, னிறைவனே யிவ்வா றம்பயன் முதலோரினும்பிரித் துத்தியால் விளக்கா, தறைதரு மிதனுன் முரணுழி வேறே ராற்றினாற் போக்கவற் றமற், கறைமிடற் றடக்கி யேழைவா னவரைக் காத்தருள் கருணைமா கடலே. (கங)

கதித்தெழும் பொருளா லுனைவிளக் கிடுங்கா ரணபத மனுவதிப் பென்னுப், பொதுக்குணம் பொதுச்சொற் பற்றியே தொடக்கம் புகல்பொருண் மாயவன் றனே, யிதற்கெனத் துணியா விறுதியும் வலியா விம்முறை யேற்றிமற் றொருவ, னதிர்ப்புற மருளின் மருளுக பிறரு மந்நெறிப் படருமாறெவனோ. (கச)

## சுவேதாச்சுவதரம்.

தற்பரா வுலகுக் காதிகா ரணந்தான் றலைமையி லுயிருடன் சடத்தைச், சொற்றிடிற் பழுதாற் பிரமமா மெனவே துணிந்துபின் பிரமமா ரென்றாய், வுற்றிடு மான்றோ ருமையருளோக்கா லுணர்ந்தனர் நீயென வென்னு, வற்புறச் சுவேதாச் சுவதர மென்னு மறைமுடி வுரைத்திடு மன்றே. (கரு)

படைப்புறு முறைமை சொலற்கெழுஞ் சுருதிப் பரப்பெலாம் பிறிதொன் றன் பொருட்டாய்க், கிடைத்தலா லவற்றுட்

காரண பதத்தைக் கிளத்தலாந் தன்பொருள் படாமை, விடைக் கொடி யாயீண் டீசனென் றரனென் றெடுத்துமெய்க் காரணந் துணிதற், கடுத்தெழு மொழியுந் தன்பொருள் படாதே லாவி னித் துணிவென்ப தெங்கே. (கசு)

இதனுளெப் போது சமமது பகலன் றென்னுமந் திர முனை யுணர்த்தி, யிதமுறு மேனைக் காரண மொழிகள் யாவு நின் பாலுறச் செலுத்தி, மதமுறு மருளோ மவற்றினைப் பிறர் மேல் வகுப்பதைப் பயன்படா தாக்கு, மதனுடல் பொடிபட நுதல்கிழித் தெழுந்த வாளெரி காட்டிய முதலே. (கஎ)

மனுவிதிற் சிவச்சொல் வேறுள சுருதி யாம்புரோ வாதத் திற் றெரிக்கும், புனிதமாம் பொருளே சாற்றிடு மெனிலெப் போதினு மாதிகா லத்தை, யனுவதித் துன்ற னுண்மையை விதியா தாயின்மற் றென்செயப் புகுந்த, தினியபே ரின்பத் தண்ணருள் கொழிக்கு மெய்ப்பிரா னிந்தமந் திரமே. (கஅ)

பெரிதுமா னத்தா லுயர்ந்தவள் பிறரைப் பேசிடா வரன் சிவன் முதலா, மரியநின் னைக் குருமணிக் கோவை யாலுடன் முழுநலங் கரித்தாள், கரியவற் கரியாய் நின்னொடொப் பவரே கருதினு மிலையெனத் துணிந்துன், றிருவடிக் கேதன் கருத் தெலா மமைத்தாள் சிருப நீட்டமா மிவளே (ககூ)

புருடசூத் தத்தின் மந்திர மிதனுட் பொருந்தினு முனைக் குறித்திடும்பல், சுருதியா னியமித் ததனையெவ் வாறு துரக்கு மம் மறைமுடி வதாஅன்று, திருவுருத் திரத்து மந்திரம் பல வுஞ் சிறப்பவீண் டுறுதலா லறியாக, குருடர்தா மதனைற் றுணி வது தகுமோ கோமளக் குணப்பெருங் கடலே (உ0)

உருத்திர மனுக்கண் முன்னரும் பின்னு முறைக்குமீண் டாதலா லிவைதாந், தெரித்துற விளக்கு நின்றிருப் பெயராற் சிறத்தலா லுருத்திர மோதல், கருத்தனு முனக்கே நிச்சயித் ததனாற் கதம்பயி லெறும்விடைப் பாகா, வருத்தியா லவற்றை யுரைத்ததே யீண்டைக் களந்தறிந் திடச்செயு மெமக்கே. (உக)

உரைக்குமீ சானச் சுருதியாற் றெரிக்கு முன்னிடத் தெய்துமென் பதுவே,பொருத்தமாம் புருட சூதத்தின் முடிவு புனைமலர்க் கருங்குழல் பாகா, விருப்புறு மேனோர் பூசனை விதியுள் விளம்பினு மவ்விதிக் கேற்பக், கருத்துறும் பொருட் டுப் பொருள்விரித் தறவோர் காட்டினு மிதுவழுப் படாதே.( )

## அதர்வசிரசு.

அனைத்துயிர் களுமாந் தன்மையும் விண்ணோ ராற்றொழு தகைமையு மரனே, யுனக்குரைத் தயன்மான் முதலியோ ருனது விபூதியென் றோதியுன் பெயர்கட்,கினப்பொரு ளுரை க்குங் கடமையா லுன்ற னிறைமையே குறித்துநின் பெருமை, சினத்தொகை யகலத் தேற்றுமா லதர்வ சிரோபநி டதமுழு வதுமே. (உ௫)

நின்றுழி நின்று முடிவுகொள் ளாது நீயறைந் தமைசொலுங் கிளவி, யுன்றனிக் கூற்று முடிவிடத் துய்த்துக் கொண்டுகூட் டிடுந்தகைத் தாயுந், தன்றனை திடத்தே முடியுமீண் டெனுமிச் சழக்குரை தேர்ந்திடிற் றலைவா, புன்றொழிற் கயவர் தமதறி யாமை புலமையாய்ப பரிணமித் ததுவே. (உ௬)

ஈண்டுநீ யாரென் றன்னுருக் கடாவு மிமையவர்க் கேனை யோ ருருவை, யாண்டுநீ யிறுத்தா யெனில்வழு வாகா தடுக்கு மோ நீயுயிர்க் குயிராய்க், காண்டக நிறைந்து மவனென யாரைக் கழறுவ தோபெரு கன்பு, பூண்டவர்க் கெளியாய் கய வருக் கேனும் பொருந்துமோ விச்சழக் குரையே. (உ௭)

அனைத்தினும் பிரமந் தனக்கதிட் டான மறையுமந் திரங் களி னுனு, முனற்கரும் பரிதி மண்டலத் துறையு மப்பொருட் குமைவிழி களிப்ப, மனக்கொரு வடிவஞ் செவியறி வுறுக்கு மனுக்களி னுனுமெய் யடியா, ரினத்தனே நீயே யெங்கணு முறைவோ னென்பதை யறியலா மன்றே. (உ௮)

ஐம்பெரும் பூத மிருசுட ரான்மா வன்றிவே றுலகிலை யவைதா, முன்பெரு வடிவ மெனப்படு மன்றே யோர்ந்துளோர்க் கிங்கது தன்னு, லெம்பிரா னீயே நிறைதிட் டாதா வென்பதற் கையமு முளதோ, வம்பரா மூர்க்கப் பேய்கடா மயக் கான் மாறுபா டுறபிதற் றுவரே. (உஎ)

கைவல்லியம்.

மலைமக ணவன் முக்கண னீல மணிமிடற் றவனென வானோர், திலகனே யுன்னைத் தகரமாங் குகையுட் டியானஞ் செய் திடுமுறை செப்பி, யலரவன் முகுந்த னீசனே டெவையு மையநின் விபூதியென் றுரைக்கு, மலவிரு டிமிதநுச் சிவச்சுடர் விளக்க வந்தகை வல்லிய மறையே. (உஅ)

தைத்திரியம்.

மிகுமது சுருதி கூறுமுன் றகர வித்தையை வேறுள விசேடப், பகுதிக ளானுந் தயித்திரி யந்தான் பகர்ந்திடும் வள்ளலே மாயோ, னகமுறு பொருளா யுனைத்தியா னிப்பா னவன்றனை நடுவனே திடுமவ், வகையறி யாத பேதைகண் மயக்கான் மற்றொரு வாறுகொள் ளுவரே. (உகூ)

விருகதாரணியாதி.

மறைகளிற் றலைமை யெய்திய விருக தாரணி யம்முதன் மறைகள், பிறவுநல் விதயத் துறுபொரு ளாமுன் பெருமையே பேசிடு மன்றே, யறவனே யிவற்றின் கருத்தெலா முன்பா லடைவதே நியமமென் றுரைப்பார், திறனறிந் துயர்ந்தோ ரா தலாற் கயவர் தீமொழி யாற்பய னென்னே. (௩௰)

மாண்டூக்கியம்.

தன்பொருள் விரிக்கும் பிறசுரு தியினுற் றன்கருத் தறிதருந் தகைத்தா, நின்புடை யெல்லா முதன்மையு முண்மை நிகழ்த்துமாண் டூக்கிய சுருதி, யுன்கழ றருமீ சானமா மனுவோ டுருத்திரோ பநிடத மனுக்க, ளென்பவு மேனை மனுக்களு மநேக மிம்முறை விளங்கவோ திடுமே. (௩க)

அறப்பெருங் கடலே யளவிலா வணக்க மறைந்திடு மெண்ணிலா மனுக்கள், பிறர்க்குரித் தாகாச் சிறந்ததோர் பெருமை பேசிடும் வெளிப்படை யுனக்கே, கறைப்பெரு மிடற்றாய் சூத்திரர் முதலோர் காலினும் விழுந்திடு மூர்க்கர், குறித்துனை வணங்கக் கூசுவ ரந்தோ கொள்ளுவ ரோதெரிந் தவரே (௩௨)

மொழிந்திடு மெல்லா வணக்கமு மெல்லா மொழிகளு முன்னையே சாரு மிழிந்திடாத் திருமா லாதிவிண் ணோரை யீன்றவன் றானும் யெனவே, பொழிந்தசீ ருனது தலைமையே யெடுத்துப் புகழ்ந்துநின் பெருங்கணத் தலைமை, விழைந்துளோர் தமது பெருமையுஞ் சால விளக்கிடுஞ் சுருதிகள் பலவே. ()

## புராணங்கள்.

எண்ணிலாச் சாகைக் குவால்களாற் றெரித்திங் கெம்மனோர் மாசறத் தெளிய, நுண்ணிய நியாய வொழுங்குக ளானுநுவன்றுறத் தேற்றுநின் பெருமை, பண்ணவா விளங்கப் புராணங்க ளெல்லாம் பன்முறை புணர்த்திடு மன்றே, கண்ணிலாச் சிறுவர் தமக்குமுள் ளங்கை நெல்லியங் கனியெனும் படியே.

## பாரதம்.

நின்பதாம் புயத்தி னருச்சனை யாற்று நெறியினன் மாயவனெனவு, மன்புறு மீசன் மாலயன் றனக்கு மாதியங் கடவுணீ யெனவு, மின்புறக் கிளக்கும் பாரதந் தானு மெந்தைநின் றலைமையே விரிக்கும், புன்புலை யேற்குந் தண்ணருள் புரிந்த பூரணா னந்தமா கடலே. (௩௫)

## இராமாயணம்.

அகந்தைநோ யறுக்கு மயனரி யாற்கு மாதியாம் பகவனீ யெனவு, மகஞ்செய விரும்பு மிராமனுன் னிடத்து வைத்திடுங் குறிப்புரை யதனாற், றிகழ்ந்தவச் சுவமே தத்தினால் வழுத்துந் தெய்வநீ யென்னவும் விளக்கி, யுகந்தவான் மீகி செய்தகாப் பியமு முன்புக ழேவிளக்‌த் திடுமே. (௩௬)

## மிருதியோகநூல்கள்.

பெரும்பெயர் மனுவோ கீச்சுரன் முதலாம் பெரியருஞ் சாத்திரந் தெரித்த, விரும்பதஞ் சலியார் முதலியோர் தாமு மேனையோர்க் குரியபல் பேதம், விரும்புபல் வழியுங் காட்டியா வருக்கு மேற்பட நினைப்புகழ்ந் துரைப்பார், கரும்பனைக் காய்ந்த கடவுளே யிதனைக் கண்டுமெந் தோமயங் குவரே. (நஎ)

## வேதாந்த சூத்திரம்.

பிறநய மாகும் புருடனங் குட்டப் பிரமிதி தனைவிரும் பாட, லறவனே யுனதீ சானநற் சுருதி யாற்பர மென்றுநிச் சயித்தோன், செறியும்வே தாந்தப பொருளினைத் தெரிக்குஞ் சூத்திரஞ் செய்தவன் கருத்து, மிறைவநின் பெருமை கண்டதே யாகு மென்பரா லாயவல் லவரே. (நஅ)

## கீதைகள்.

பெருவழுக் காகக் கீதைக ளகத்துப் பேசுமோங் தத்துசத் தென்னு, முறைதரு பதமும் பிரமமென் பதமு முணர்த்திடும் பொருளுநீ யென்றே, தெரிதரக் காட்டுஞ் சாத்திரங் களினும் வெளிப்படத் தெரிந்தன மையா, விரிதரு நீயே யுலகினுக் கெல்லா மேற்படுந் தெய்வமென் பதுவே. (நகூ)

உனையலா வெல்லா விறைமையு முடையோ னென்றுமற் றெவன்றனை யுரைபபே,முனிவில் சான முதலிய சுருதி மொழிபபொரு டானுநீ யன்றே, யனையறு யிவைதாஞ் சமாககியை சுருதி யலவெனு மயங்கிருட் குகையுள், வனைபுகழ் வேதத் துபயநூ றோர்ந்த மதியினோர் மதியகப் படாதே. (சo)

பலபல விடத்துஞ் சுருதியி லுனையே பகர்ந்திடும் புராண மு மிவ்வா, றிலகுறத் தெரிக்கும் விச்சுவா திகனென் றிபபெயர் சிறபரா வெல்லா, வுலகினுக் கதிக னீயெனப் பகுத்து வெளிப்படத் தெளியவற் புறுத்திக், கலகஞ்செய் பொல்லாக் கயவர்தஞ் செவிக்குங் கடுங்கனற் சலாகையா மன்றே. (சக)

இறைமையிவ் வாறு பகுத்திடத் தகாதே லுனையொழிந்
திபாண்டுமுற் றறுமோ, முறைபெறு மண்டந் தொறுமய னர
ன்மான் மூவரும் வேறுவே றாகிப, பிறமூறுங் கற்பந் தொறு
நவ நவமாய்ப் பிறந்துநின் றனையி னடங்கி, யுறைவரே யாதி
யந்தமு மின்றி யொழிவற நிறைந்தவான் பொருளே (சஉ)

வைபெனப் பெறுமுன் பெருமையே முழங்கு மறைக
ளும் பலபல மறைந்தே, ரப்பொருள் விரிக்கும் புராணமு மவ்வா
றுருகுமிவ் வளவீன்றெற் றனே, செயபிடந் தருமா னின்பெருந்
தகைமை தேருநர்க கிறுவன்றி வேறு, மெய்ப்படு மளவை வே
ண்டுமோ வேண்டா விளங்கிழைக கிடங்கொடுத் தவனே. ( )

பிறர்க்குரித் தல்லாப பெயர்களான் மறைகள் பிஞ்ஞகா
நாரணன் யென்மை, குறித்துரைத் திடுமா லேலவினை ணவர்
கருக் கூறிடா திம்முறை யிதனுன், மறைப்பொரு ளுண்மை
தெரியலா மென்று மந்திரோ பநிடத முதலாந், திறப்படு மறைக
ளோதிடாக் கயவா செயபிடு முரையயன் படாதே. (சச)

தாணுமா லயற்குத் தம்முளே யுயர்ச்சி தாழ்ச்சிகூ றிடும்
புரா ணங்கட், சேணுறுங் கற்பப பிரிவினுற் போககென் றியம்
பிடு மச்சபு ராண, மாணலா ரிதனை சிவபுரா ணத்துக் கப்பிர
மாணபோ துவதா, நாணிலா துரைத்துத தமதறி யாமை நாட்
டுவா நாடரும் பொருளே. (சரு)

உன்னிறை மையினை முகுந்தன திடத்து முவன தாரங்க
ளிடத்துந், தனனுடைக் கூறு மொற்றுமை யதனுற் சாற்றிடு
மாரண மொழிக, ளின்னதிவ் வளவே யவற்றினுள் ளுறையெ
ன் றியம்புவ ருந்தவ முனிவர், மன்னனே யிதனைத் தேறிட
மாட்டார் மயக்கமாங் கடலமுந் துவரே. (சசு)

மாயவ னின்பா லேகனும் முன்னர் வந்துதித் தனன்பின்ன
ரவன்றன், பாயுல கொடுக்கும் புருடனை யயனைப் படைத்த
னன் முந்துகா லத்தென், றேயுறு மகோப நிடதமோ திடுவ
தியாதது நின்னிடத் துறுதா, லோய்விலா துருகி யுள்ளவல்
லவர்க ளுள்ளகத் துறைமணி விளக்கே. (சஎ)

அறுக்குமோர் கற்பத் தயனொரு கற்பத் தரியொரு கற்ப த்தி லரன்முன், பிறப்பனுன் பான்மற் றிருவரை முன்னோன் பெற்றளித் திடுவென்மற் றிதனு, லுறப்பெறு முயர்ச்சி தாழ்ச் சிக ளொருவர்க் குள்ளதோ வில்லையென் றிவ்வா, றிறப்புறு மறைகண் முழுவது முணர்ந்தோ ரியம்புவ ரெம்பெரு மானே.

ஆங்கொரு சார ரயனரி யிருவர்க் குருத்திர னதிகனு மெனவு, மீங்கிவர் தம்பா லவன்பிறந் தானென் பதுமவன் கூற் றினுக் கெனவு, மோங்குமால் விடையா யுன்னு நாம மொப்பு மை செய்கைமற் றெல்லா, நீங்கிடா துடையோ னுதலான் மே லாய் நிற்பவ னெனவுமோ துவரே. (சகூ)

தேவர்மூ வருக்குந் தலைமையொப் புமைதான் செப்புக வன்றிமற் றிவருண், மேவரு மேலோ னுருத்திர னெனத்தான் விளம்புக வெந்தவா றேனுங், காவல நீயே யாவர்க்கு மேலாங் கடவுளென் பதுபெரு வழக்கே, யோவுறு முலகெ லாம்பணி செய்யு மொருவனீ யாகிநின் றனையே. (ருO)

உலகெலாம் பணிசெய் திடத்தகுந் தலைமை யொருவனீ யேயிது வறியாக், கலதிகள் வறிதே போக்குவர் வாணாள் கடையனேற் கருள்பசு பதியே, சுலவுதே வருக்கு மானுடர் போலச் சுராசுரர் மானுடர் முதலாம், பலவுயிர் களுமுன் பணிவழி நிற் றற் பாலன பசுக்கள்போ லன்றே. (ருக)

மானிடர் தருமப் பெருமைசேர்ந் துரைக்கு மாதவர் நின் னிடத் தன்பு, மானிடந் தரித்தோய் தருமமார்க் கத்துட் சிறந் தெடுத் தெண்ணிய வாற்றான், மானிடப் பிறப்பைப் பெற்று ஞ்செய் வினையின் வயத்தராய் நினக்கன்பு செய்யா, மானிடப் பதர்கட் கெந்தவா றேனும் வருங்கதி கண்டிலன் யானே. ()

இருபிறப் பாளர் நியதியாய் வழுத்தற் கெடுத்தல்கா யத் திரி யன்றே, வருமதற் குயர்ந்த * தெய்வநீ யென்றே வழுத்

* காயத்திரி மந்திரத்துக்கு அதிதெய்வம் சிவபெருமானே யென்பதனை சூதசங்கிதை எக்கியவைபவகாண்டம் ஆறுமத்தியாயத்திற்காண்க.

திடு மிதுபெரு வழக்கே, மருவரும பொருளே யாதலி னுன்றுள் வழிபடா விருபிறப் பாளர், புரியுநல் வினைக ளியாவையும் புனையுந் தூசிலா வணியெனப படுமே. (௫௩)

விப்பிரர்க் கெல்லா மங்கியிற றெய்வ மேவுமென் றுந்தழற் கடவுட், கொப்பிலா நீயே யநகரி யாமி யென்னவு முயர் மறை மிருதி, செப்பிடும் வசன மிவ்விரு வகையுந் திரண்டுநீ யடியனே னாகிர், குப்புரு தருள்வோய் விப்பிரர் தமக்குக் குலதெய்வ மெ னவிளக் கிடுமே. (௫௪)

வேதியர் குலத்திற் பிறந்தவா சயகரு விசேடமா யிக்கலியுகத்தில், வேதநீ தெய்வ மெனபபுரா ணங்கள் விளம்பவு மன்பினு லுன்றன், பாததா மரையை வழிப டா தேனைப பண்ணவர் தமைவழி படுவோர், பாதக மறையோரா மூடர்க ளவர்க்குப் பயன்றரா பரதெய்வங் களுமே (௫௫)

எந்தைநீ பொறுமை யுடை யவன கருத்துக் கெளியவனுனனருள் கையில், வந்தது போலுன னடியர்க்கு விரைவின் வாய்த்திடு மவர்பெறும் பேறுஞ், சிசைவேட் டதற்கு மேறபடப் பெறுவர் தேர்ந்திடின் முழு நமுன் னுடைமை, யிந்தவாய் மையினுற் பயன்குறித் தவர்க்கு நினைநீ ஈரணைத் தருமே.

இம்மையிற் போக முனைவழி படுமவார்க் கெண்ணரும் பெருமைய தென்ப, ரம்மையி லேனை யுள்ளன நிற்க வுண்ணலே யுன்னனு சார்க, டடமுடைய பதமு மரியயன் முதலோர் தம்பதங் களுக்குமே லாகச, செம்மைதேர்ந் துரைப்ப ராகமத் துறையிற் றிளைத்துமெய் யுணாந்தயா தவரே. (௫௭)

நிகழ்பிர கிருதி கடந்தபெய வாழ்வா நிரதிச யானந்த மதுவுந், திகழுநின் னருளாற் பெறுவதாம் பிறவித் தீயநோ யறுக்குநன் மருந்தே, புகலிதற கேது மெய்ப்பொரு ளுண்மை போதிக்கு ஞானமா மதுவு, மகலிடத துனது திருவருள் கிடைத்தா லல்லது கிட்டுறு தன்றே. (௫௮)

வருந்திடா வகைவேட் டதனின்மேம் பட்ட பயன்பெற வதவிட வற்றாந், திருந்துநின் வழிபா டொருதலை யாகச் செய் யவேண் டிடுந்தகைத் தாயும், பிரிந்துனை நீத்து வேறொரு தெய்வம் வழிபட நாடுவர் பேயோ, ரருந்தவப் பொருளே வெவ் யலூழ்க் கொடுமை விலககுத லரிதரி தந்தோ. (நக)

மருளினு லவிச்சை யாலவாத் தன்னுன் மதாபிமா னங்க ளால் வறிதே, யொருவுக வாறு ளுனைத்தெ முா மூர்க்க ரொரு வனே யாங்களெல் லோமுந், திருமகன் மலருவி முதலியோ ரோடுஞ் சேரநின் னடியராய்த் தொழுதேம், பொரிதுமிம் மதியே பெயர்ந்திடா திருக்கும் பேறளித் தருள்கமற் றெமக்கே.

வேறு.

இவ்வாறு முப்பா னிரட்டிப படுசெய்யு ளாலுன்
செவ்வா னடியிற் சிவதோத் திரமாலைசோதரே
னிவ்வாய் மையினித முமொாகா விதனைப படிடபோ
ருய்வா னுனதின் னருள்கூ டுகவும் பரானே.

வேறு

விண்ணோர் தமக்குந் தெரிவருநின் யேன்மை யெங்கே யானெங்கே, தண்ணார் துதியென் றிதுவுமொரு குற்றந் தாறு ய்ச் சமைந்ததா, லண்ணு வன்புக் கெளியாயா னவாவாற் செய்தே னுதலினு, லெண்ணு தெல்லாம் பொறுத்தருள்வா யென்னு மிதுவென் றுணிபாமே. (ருஉ)

வேறு

யானே யறிவே னிவனை யெனத்தன் றனுவா
லானு வரியே புகன்று னெனிலந் தநின்சீர்
தேனு ரமுதே யினிமற் றெவர்தே றவல்லார்
கோனு யுயிர்தோ றுறையம் பலக்கூத் துளானே. (ருங)

## சிவதத்துவவிவேகம் முற்றிற்று.